# NEWSLETTER

பதிப்பு 03
புரட்டாதி 2020

# செய்தி மடல்






## சத்தியவான் அறக்கட்டளை

### - *ஒரு பார்வை* -

சத்தியவான் அறக்கட்டளையானது **04/06/2017** அன்று ஐக்கிய இராச்சியத்தில் வாழும் கணபதிப்பிள்ளை குடும்ப உறுப்பினர்களினால், தொப்புள்கொடி உறவுகளான இன்பர்சிட்டி மக்களின் வாழ்வாதார உயர்வு ஒன்று மட்டுமே நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.



இன்பர்சிட்டி சிறுவர் பூங்காவில் தொடங்கி தனியார் தொழில் வாய்ப்புதிட்டங்கள், கொரோணா உதவித்திட்டம் என்று பல வகையான உதவித் திட்டங்களை எந்தவித சலசலப்புமின்றி மிக நேர்த்தியாக நிறைவேற்றிக் கொண்டு வருவது, புலத்தில் மட்டுமல்ல களத்திலும் பலராலும் பாராட்டப்பட்டிருப்பதன் மூலம் சேவை நோக்கில் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கும் அறக்கட்டளைகளில் முதலிடம் வகிக்கின்றது என்பது உண்மை.






அதுமட்டுமல்ல புலம்பெயர் நாடுகளில் வாழும் இன்பர்சிட்டி உறவுகள், சத்தியவான் அறக்கட்டளையின் செயற்பாடுகளைப் பார்த்து தாமும் இதேபோல உதவி செய்ய வேண்டுமென்று பல வேறு குழுக்களாக இணைந்து இன்பர்சிட்டி மக்களுக்கு உதவி செய்ய முன்வந்திருப்பதன் மூலம் புலம்பெயர் வாழ் இன்பர்சிட்டி உறவுகளின் சமூகப் பார்வையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு சத்தியவான் அறக்கட்டளையின் செயற்பாடுகள் இன்றியமையாததாக இருக்கின்றது.

இவ்வறக்கட்டளையின் செயற்பாடுகள் ஈழத்தில் மட்டும் மட்டுப்படுத்தப் படவில்லை; மேலைத்தேய அவசர வாழ்க்கைக்கு ஈடு கொடுக்க முடியாது, கணவன் ஒரு திசையும் மனைவி ஒரு திசையும் என ஓடிக்கொண்டிருக்கும் இயந்திர வாழ்க்கைக்கு வேகத்தடை போட்டு, இடையிடையே இடம்பெறுகின்ற ஒன்றுகூடல்கள் மூலம் உறவுகளைக் கண்டு, பேசி, உண்டு களித்திருப்பது மட்டுமன்றி மேடை நிகழ்வுகளை நடாத்தி எமது அடுத்த தலைமுறையினரின் கலைத்திறமைகளை வெளிக்கொண்டு வருவதுடன் எமது பண்பாட்டு விழுமியங்களை அவர்களுக்கு எடுத்துச் செல்ல உதவுகிறது.



மிகக் குறுகிய காலத்தில் அளப்பரிய செயல்திட்டங்களையும் சேவைகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றி பலதரப்பட்ட மக்களின் நெஞ்சங்களை வென்றிருப்பதற்கு முற்றுமுழுதான காரணம்; நிதி கேட்கும்போதெல்லாம் இன்முகத்துடன் பங்களிப்பு செய்யும் தாராள மனம் கொண்ட உறுப்பினர்களும், இரவு பகல் பாராது அறக்கட்டளையின் சேவையையே நோக்கமாகக் கொண்டு உழைக்கும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளுமே, என்பதை எவராலும் மறுக்க முடியாது.

# தனிநபர் வேலைத்திட்டம்



சத்தியவான் அறக்கட்டளையால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் தனிநபருக்கான தொழில்வாய்ப்பிற்கான உதவிவழங்கல் திட்டத்தின்கீழ் நான்காவது நபராக திருமதி இரஞ்சினி தேவதாஸ் அவர்களுக்கு 14/10/2019 அன்று உதவி வழங்கப்பட்டது. இவர் சத்தியவான் என அனைவராலும் அறியப்பட்ட கணபதிப்பிள்ளையின் மகன் கதிரமலை வழி பேரன் தேவதாஸின் மனைவி ஆவார். கணவர் இறந்த பின்னரும் சந்தையில் வியாபாரம் செய்து குடும்பத்தை மிகவும் சிரமப்பட்டு நடாத்திய இவர், சத்தியவான் அறக்கட்டளையின் தனிநபர் சுயதொழில் உதவித்திட்டத்தின் மூலம் கிடைத்த உதவித்தொகையைக் கொண்டு ஒரு சிறிய உணவுச்சாலையை ஆரம்பித்து குடும்பத்தை கொண்டு நடாத்தக்கூடிய அளவிற்கு வருமானத்தை ஈட்ட ஆரம்பித்தார். அந்தக் கடையினை ஆரம்பித்ததன் மூலம் ஒரு பாடசாலையில் சிற்றுண்டிச்சாலையில் உணவு மற்றும் குடிபானம் வழங்குவதற்கான முழு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொண்டார். அந்த வேளையில் உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும் கொரோணாவின் தாக்கத்தால் நாடு முழுவதும் முடக்கப்பட்டதனால் , பாடசாலையில் சிற்றுண்டிச் சாலையினை நடாத்த முடியாமல் முடங்கியுள்ளார். ஆனாலும் நாடு வழமைக்கு திரும்பும்போது பாடசாலைகள் மறுபடியும் திறக்கப்படும் போது சிற்றுண்டிச்சாலையை பாடசாலையில் ஆரம்பித்து நடாத்த முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் , அனைவரும் வழமைக்கு திரும்பும்போது தனது வருமானமும் கனிசமான அளவு உயரும் என்றும், தனது நம்பிக்கையினை முழு மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் சத்தியவான் அறக்கட்டளைக்கு தெரிவித்தார்.

இவ்வாறாக சத்தியவான் அறக்கட்டளையின் தனிநபர் சுயதொழில் உதவித்திட்டத்தால் பயன் அடைவோரை பார்க்கையில், உதவித் திட்டங்கள் சரியான வழியில் பயனாளிகளை சென்றடைவதையிட்டு நாம் மகிழ்ச்சியும் நிறைவும் அடைகிறோம்!